# சிற்றிலக்கியம்

**குற்றாலக் குறவஞ்சி**

- ஆசிரியர் - திரிகூடராசப்பக் கவிராயர்
- குறவஞ்சி என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது.
- இந்நூல் ஓசை நயம்மிக்க பாடல்கள் ஆகும்.

- **குற்றாலக் குறவஞ்சி**

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பார்
கமனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனல் இளம் பிறைமுடித்த வேணி அலங்காரர்
குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே!

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூல்உளைச் சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
திருக்குற் றாலர் தென் ஆரிய நாடே!

- திரிகூட ராசப்பக் கவிராயர்

**முக்கூடற்பள்ளு**

**ஆசிரியர் குறிப்பு:**

- இந்நூலின் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை. ஆயினும், நாடகப் பாங்கில் அமைந்த இந்நூலை இயற்றியவர் என்னயினாப் புலவர் என சிலர் கூறுவர்.
- சந்தநயம் அமைந்த பாக்களைக் கொண்ட இந்நூலில் திருநெல்வேலி மாவட்டப் பேச்சு வழக்கை ஆங்காங்கே காணலாம்.

- **முக்கூடற்பள்ளு**

**(நீர்வளம் - இளைய பள்ளி)**

தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்
சாலை வாய்க்கன்னல் ஆலை உடைக்கும்

கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்
கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும்

நித்தம் சாறயர் சித்ரம் படைக்கும்
நிதியெல் லாந்தன் பதியில் கிடைக்கும்

மத்தம் சூடும் மதோன்மத்த ரான
மருதசீர் மருதூர் எங்கள் ஊரே.

**அம்மானை:**

**ஆசிரியர் குறிப்பு:**

- திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூலை இயற்றியவர் ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் ஆவார்.
- ஈசான தேசிகர் என்பது அவரது சிறப்புப் பெயராகும்
- தாண்டவமூர்த்தி என்பவர்க்கு மகனாக பிறந்தார்.
- இவர் மயிலேறும் பெருமாள் என்பாரிடம் கல்வி கற்றார்.
- இவர், திருவாடுதுஜற ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிக மூர்த்திக்கு தொண்டராய் இருந்தார்.
- ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்.

**நூல் குறிப்பு:**

- ❖ திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூல் தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- ❖ கலம்பகம் - கலம் + பகம் எனப் பிரியும், கலம் - பன்னிரண்டு, பகம் - ஆறு ஆக பதினெட்டு உறுப்புகளைக் கொண்டது.
- ❖ பல்வகையான பா வகைகளும் கலந்திருந்தலால் இந்நூல் கலம்பகம் எனவும் பெயர் பெற்றது.
- ❖ பதினெண் உறுப்புகளில் ஒன்றாகிய அம்மானை என்னும் பகுதி ஈண்டு பாடப்பகுதியாக இடம் பெற்றுள்ளது.

**அம்மானை**

வீரன்நெடு வெள்வேல் வியன்செந்தில் எம்பெருமான்
பாரில்உயி ரெல்லாம் படைத்தனன்காண் அம்மானை,
பாரில்உயி ரெல்லாம் படைத்தனனே யாமாகில்
ஆரணங்கள் நான்கும் அறிவனோ அம்மானை,
அறிந்து சிறைஅயனுக் காக்கினன்காண் அம்மானை.
- சுவாமிநாத தேசிகர்

**தமிழ்விடு தூது:**

- ❖ தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் தூதும் ஒன்று.
- ❖ கலிவெண்பாவில் உயர்திணைப் பொருளையோ அ∴றிணைப் பொருளையோ தூது அனுப்புவதாகப் பாடுவது தூது இலக்கியம்
- ❖ மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்க நாதர் மேல் காதல் கொண்ட பெண்ணொருத்தி, தன் காதலைக் கூறி வருமாறு தமிழ்மொழியைத் தூது விடுவதாகப் பொருளமைந்தது தமிழ்விடு தூது.
- ❖ இதனை இயற்றியவர் பெயர் அறிய இயலவில்லை.

**தமிழ்விடு தூது**

அரியா சனமுனக்கே யானால் உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழே – விரிவார்

திகழ்பா ஒருநான்குஞ் செய்யுள்வரம் பாகப்
புகழ்பா வினங்கள்மமடைப் போக்கா – நிகழவே

நல்லேரி னால்செய்யுள் நாற்கரணத் தேர்பூட்டிச்
சொல்லேர் உழவர் தொகுத்தீண்டி – நல்லநெறி

நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்
மேலே பலன்பெறச்செய் விக்குநாள் - மேலோரில்

பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் வில்லிஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொள்ளும் - சீத்தையரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் - கட்டி

வளர்ந்தனை பால்முந்திரிகை வாழைக் கனியாய்க்
கிளர்ந்தகரும் பாய்நாளி கேரத்து - இளங்கனியாய்த்

தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்

உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.

**❖ அழகர்கிள்ளைவிடு தூது**

- ➢ ஆசிரியர் பலபட்டை சொக்கநாதபிள்ளை
- ➢ 18 ஆம் நூற்றாண்டினர் மதுரையைச் சேர்ந்தவர்.
- ➢ இவர் முன்னோர் மதுரை மன்னரிடம் பலபட்டடை கணக்குத் தொழில் புரிந்தனர்.

- இவர் சொக்கநாதப் பெருமான் மீதும் அங்கயற்கண்ணி மீதும் ஆராக்காதல் கொண்டவர்.
- நூல்கள்: மதுரை யமக அந்தாதி, மதுரை மும்மணிக்கோவை, தேவைஉலா (இராமேஸ்வரத்திற்குத் "தேவை" என்று பெயர்) அழகர் கிள்ளைவிடு தூது பத்மகிரிநாதர் தென்விடு தூது (பத்மகிரி – திண்டுக்கல்), கன்னிவாடி நரசிங்க நாயக்கர் வளமடல் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.
- பல தனிப்பாடல்களையும் பாடியுள்ளார். அவை தனிப்பாடல் திரட்டு என்ற நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.
- அழகர்கிள்ளைவிடு தூது புகழ்பெற்ற தூது இலக்கிய நூல் ஆகும்.
- சைவரான சொக்கநாதப்பிள்ளை வைணவக் கடவுள் மீது பாடிய நூல்
- கிளியின் பெருமை – அழகரின் பெருமை – அழகர் உலா வருதல் - தசாங்கம் - ஊர்த்திருவிழா – தலைவிநிலை – கிளியை வேண்டுதல் - கோயில் பணியாளர் - தூது உரைக்கும் முறை – தூதுச் செய்தி – மாலை வாங்கிவா என இதன் பொருள் அமைப்பு உள்ளது.

**மேற்கோள்**

"வேளாண்மை எனும் விளைவிற்கு நின் வார்த்தை
கேளாதவர்காண் கிள்ளையே".
"மாலினைப்போல மகிதலத்தோர்வாட்டமற
பால் அ(ன்)னத்தாலே பசி தீர்ப்பாய்"

- 1936ல் உ.வே.சாமிநாதஐயர் பதிப்பித்தார்.

**நந்திக் கலம்பகம்:**

**ஆசிரியர் குறிப்பு:**

- தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு இந்நூலை வழங்கியவரின் பெயரும் ஊரும் அறியப் பெறவில்லை.

**நூற் குறிப்பு:**

- மூன்றாம் நந்திவர்மனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற கலம்பகம். ஆதலின், நந்திக் கலம்பகம் எனப் பெயர் பெற்றது.
- இந்நூலின் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு
- கலம்பகம் என்பது, தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- கலம் + பகம் - கலம்பகம். கலம் - பன்னிரண்டு பகம் - ஆறு, பதினெட்டு உறுப்புகளைக் கொண்டதால் கலம்பகம் என்னும் பெயர் வந்தது எனவும் கூறுவர்.

**நந்திக் கலம்பகம்**

**நந்திமன்னன் வீரம்**

பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு
பருமணி பகராநெற்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு திழிதரு
காவிரி வளநாடா
நிதிதரு கவகையும் நிலமகள் உரிமையும்
இவையிவை யுடைநந்தி
முதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர்
வானகம் ஆள்வாரே.

## ➢ விக்கிரமசோழன் உலா

### ✹ ஆசிரியர் குறிப்பு:

- ✓ இயற்பெயர் - ஒட்டக்கூத்தர்
- ✓ சிறப்புப் பெயர் - கவிச்சக்கரவர்த்தி
- ✓ சிறப்பு - விக்கிரமசோழன்

இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூன்று மன்னர்களின் அவையிலும் செல்வாக்கோடு விளங்கியவர்.

❖ இயற்றிய நூல்கள்:

1. மூவருலா
2. தக்கயாகப்பரணி
3. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்

❖ காலம் - பன்னிரண்டாம் நூற்றாண்டு

### ✹ நூல் குறிப்பு

- ❖ உலா என்பது, தொண்ணூற்று சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.
- ❖ இறைவன் மன்னன், மக்களுள் சிறந்தோர் முதலியோரின் சிறப்புகளை எடுத்துக்கூறும் நோக்கிலேயே இவ்வகைச் சிற்றிலக்கியங்கள் எழுதப் பெற்றுள்ளன.

**விக்கிரமசோழன் உலா**

- ✓ ஒட்டக்கூத்தர் எழுதிய மூவர் உலாவில் ஒன்று.
- ✓ முதற்குலோத்துங்கனின் நான்காவது மகன் விக்கிரமசோழன். இவன் தாய் மதுராந்தகி ஆவார்.
- ✓ 12 ஆம் நூற்றாண்டு
- ✓ விக்கிரம சோழனின் முன்னோர்களைப் பட்டியலிட்டுக் கூறும் வரலாற்று ஆவணநூல்.
- ✓ குடகுமலையை ஊடறுத்துக் காவிரியாற்றைக் கொணர்ந்தவன் கவேரன்.
- ✓ மேருமலையின் உச்சியில் புலிக்கொடி நாட்டியவன் கரிகாலன்.
- ✓ காவிரியின் கரைகளை உயர்த்தின் கட்டியவன் கரிகாலன்.
- ✓ பொய்கையாரின் களவழி நாற்பதிற்காகச் சேரமான் கணைக்கால் இரும்பொறையை விடுதலை செய்தவன் செங்கணான்.
- ✓ போரில் 96 விழுப்புண்களைப் பெற்றவன் விஜயாலயன்.
- ✓ தில்லைநடராசன் கோயிலுக்குப் பொன் வேய்ந்தவன் முதல் பராந்தகன்.
- ✓ 18 சிற்றூர்களைக் கைப்பற்றி மலைநாட்டை வென்றவன் முதலாம் ராஜராஜன்.
- ✓ கங்கை கொண்ட சோழன் ராஜேந்திரன்
- ✓ கடாரம் கொண்ட சோழன் ராஜேந்திரன்
- ✓ சேரரின் கடற்படை முழுவதையும் அழித்தவன் ராஜேந்திரன்.
- ✓ சாளுக்கியரின் தலைநகரான கல்யாணபுரத்தின் மீது மும்முறை போரிட்டு வென்றவன் ராஜாதிராஜன்.
- ✓ கொப்பத்துப் போரில் ஆயிரம் யானைகளை வென்றவன் இரண்டாம் ராஜேந்திரன்.
- ✓ திருவரங்கத்துப் பெருமாளுக்கு மணிகளால் பாம்பணை அமைத்தவன் ராசமகேந்திரன்.
- ✓ தியாக சமுத்திரம் அகளங்கன் என்ற பட்டப் பெயர்கள் கொண்டவன் விக்கிரமாதித்தன்.
- ✓ சிதம்பரம் கோயில் புறமதிற்சுவருக்கு விக்கிரமசோழன் திருமாளிகை என்று பெயர் வழங்கியது.
- ✓ விக்கிரமன் திருவரங்கத்து அரங்கநாதர் கோயிலின் ஐந்தாம் திருச்சுற்றைக் கட்டினான்.
- ✓ சூரைநாயகன் என்ற மாதவராயன், செங்கேணில் பரம்பரையினரான சம்புவராயர்கள், யாதவராயரின் முன்னோர்கள் ஆகியோர் விக்கிரம சோழனுக்குத் திறை செலுத்தியவர்கள் என்று இவ் உலா கூறுகிறது.

❖ **விக்கிரமசோழன் உலா**

1. கொள்ளும் குடகக் குவடு டறுத்திழியத்
தள்ளும் திரைப்பொன்னி தந்தோனும் - தெள்ளருவிச்

சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியும் - இன்னருளின்

மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும் - மீதெலாம்

எண்கொண்ட தொண்ணூற்றின் மேலும் இருமூன்றும்
புண்கொண்ட வென்றிப் புரவலனும் - கண்கொண்ட

கோதிலாத் தேறல் குனிக்கும் திருமன்றம்
காதலால் பொன்வேய்ந்த காவலனும் - தூதற்காப்

பண்டு பகலொன்றில் ஈரொன் பதுசுரமும்
கொண்டு மலைநாடு கொண்டோனும் - தண்டேவிக்

கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியனும் - வங்கத்தை

முற்று முரணடக்கி மும்முடிபோய்க் கல்யாணி
செற்ற தனியாண்மைச் சேவகனுமம் - பற்றலரை

வெப்பத் தடுகளத்து வேழங்கள் ஆயிரமும்
கொப்பத் தொருகளிற்றால் கொண்டோனும்- அப்பழநூல்

பாடரவத் தென்னரங்க மேயாற்குப் பன்மணியால்
ஆடரவப் பாயல் அமைத்தோனும்.

- ஒட்டக் கூத்தர்

❖ **இராஜராஜன் சோழன் உலா**

- இதன் ஆசிரியர் ஒட்டக்கூத்தர்
- மூவர் உலாவில் இடம் பெற்றுள்ள ஒரு நூல்.
- விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜராஜன் என்ற மூவர் மீதும் பாடப்பட்ட உலா நூல் மூவர் உலா.
- இரண்டாம் ராஜராஜன் மீது ஒட்டக்கூத்தரால் பாடப்பட்ட இந்த நூல் 391 கண்ணிகள் உள்ளன.
- "புயல்" என்ற மங்கலச் சொல்லால் இந்நூல் தொடங்குகின்றது.

**நூற்செய்திகள்**

- சோழமன்னர்களின் வழிமுறை, செய்த போர்கள், அடைந்த வெற்றி, அளித்த கொடை பற்றிக் கூறுகிறது.
- இராஜராஜன் கருநிறத்தவன், அவன் பட்டத்து அரசி புவனமுழுதுடையாள்.
- இராஜராஜனுக்கு வரராசன், கண்டன், சனநாதன் என்ற பட்டப் பெயர்களும் விளங்கின.
- அரசன் பெரும்பாலும் பாசறையிலேயே இருந்தால் "அயிற்படை வீரன்" எனச் சிறப்பிக்கப்படுகிறான்.
- பார் மடந்தை கைகளிலும், போர் மடந்தை தோளிலும், திருமடந்தை விழிகளிலும், கலை மடந்தை அவன் செவிகளிலும் வாழ்வதாகப் பாடியுள்ளார்.
- திருவெம்பாவை, கச்சிக் கற்றளி குறித்த குறிப்புகளும் உள்ளன.
- கொப்பத்துப் பரணி, கூடல் சங்கமத்துப் பரணி, கலிங்கத்துப் பரணி, ஆகிய மூன்று பரணி நூல்களைக் குறிப்பிடுகிறது.

இதன் ஒவ்வொரு கண்ணிக்கும் அரசன் ஆயிரம் பொற்காசுகளைத் தந்து பாராட்டினான்.

- **முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்**

✸ **ஆசிரியர் குறிப்பு:**

✓ பெயர் - குமரகுருபரர்
✓ பெற்றோர் - சண்முகசிகாமணிக் கவிராயர் - சிவகாமசுந்தரியம்மை

- ✓ ஊர் - திருவைகுண்டம்
- ✓ சிறப்பு - தமிழ், வடமொழி, இந்துத்தானி ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர் திருப்பனந்தாலிலும் காசியிலும் தம் பெயரால் மடம் நிறுவி உள்ளார்.
- ✓ இறப்பு - காசியில் இறைவனது திருவடியடைந்தார்.

**✹ நூல் குறிப்பு**

- ✓ தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று பிள்ளைத்தமிழ்
- ✓ இறைவனையே நல்லாரையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடப்பெறுவது பிள்ளைத்தமிழ்
- ✓ பத்துப் பருவங்கள் அமைத்துப் பருவத்திற்கு பத்து பாடலென நூறு பாடலால் பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்பாடுகளை எடுத்து இயம்புவது பிள்ளைத்தமிழ்
- ✓ ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.
- ✓ பத்து பருவங்களில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ஆகிய ஏழு பருவங்களும் இருபாற்பிள்ளைத்தமிழுக்கும் பொதுவானவை.
- ✓ இறுதி மூன்று பருவங்களான சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆண்பாலுக்கும் , அம்மானை கழங்கு (நீராடல்), ஊசல் என்பன பெண்பாலுக்கும் உரியன.
- ✓ புள்ளிருக்குவே;ரில் (வைத்தீசுவரன் கோவில்) எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானின் பெயர் முத்துக் குமாரசுவாமி அவர் மீது பாடப்பட்டமையால் இது முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் எனப் பெயர் பெற்றது.
- ✓ குழந்தையின் பதின்மூன்றாம் திங்களில் நிகழ்வது வருகை பருவம் ஆகும்.

**✹ இலக்கியத்தில் நகைச்சுவை**

- ✓ இலக்கியச் சுவைகளில் மிகவும் நுட்பமானது நகைச்சுவை.
- ✓ நகைச்சுவை உணர்வு இல்லாதவர்களுக்கு பகலும் இருளாகத் தோன்றும் என்கிறார் காந்தியடிகள்.
- ✓ நாஞ்சில் நாட்டுக் கவிஞர் தேசிக விநாயகனாரின் மருமக்கள் வழி மான்மியம் ஒரு நகைச்சுவை களஞ்சியம் என்பர்.

**❖ முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் வருகைப் பருவம்**

உலகு குளிர எமது மதியில் ஒழுகும் அமுத கிரணமே

உருகும் அடியர் இதய நெகிழ உணர்வில் எழுதல் உதயமே

கலையும் நிறையும் அறிவு முதிர முதிரு மதுர நறவமே

கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே

அலகில் புவனம் முடியும் வெளியில் அளியும் ஒளியின் நிலயமே

அறிவுள் அறிவை அறியும் அவரும அறிய அரிய பிரமமே

மலையின் மகள்கண் மணியை அனைய மதலை வருக வருகவே

வளமை தழுவு பருதி புரியின் மருவு குமரன் வருகவே

- குமரகுருபரர்

**முத்தொள்ளாயிரம்**

- **நூல் குறிப்பு:**

- முத்தொள்ளாயிரம் மூவேந்தர்களைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்டது.
- புறத்திரட்டு என்னும் நூல்வாயிலாக நூற்றெட்டு வெண்பாக்களும் பழைய உரை நூல்களில் மேற்கோள்களாக இருபத்திரண்டு வெண்பாக்களும் கிடைத்துள்ளன.
- மூவேந்தர்களின் ஆட்சிச்சிறப்பு, படைச்சிறப்பு, போர்த்திறன், கொடை முதலிய செய்திகளை இப்பாடல்கள் விளக்குகின்றன.
- சிறந்த இலக்கிய நயமும் கற்பனை வளமும் நிறைந்த நூலாக முத்தொள்ளாயிரம் திகழ்கிறது.
- இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

**முத்தொள்ளாயிரம்**

**சேரன்**

பல்யானை மன்னீர் படுதிறை தந்துய்ம்மின்
மல்லல் நெடுமதில் வாங்குவில் பூட்டுமின்
வள்ளிதழ் வாடாத வானோரும் வானவன்
வில்லெழுதி வாழ்வார் விசும்பு.

**சோழன்**

சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி
ஈர்த்திட் டுயர்துலைதான் ஏறினான் - நேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர மோசென்னி பண்பு.

**பாண்டியன்**

மருப்பூசி யாக மறங்கனல்வேல் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத் - திருத்தக்க
வையக மெல்லா மெமதென் றெழுதுமே
மொய்யிலைவேல் மாறன் களிறு.

- **கலிங்கத்துப் பரணி**

- **ஆசிரியர் குறிப்பு**

- கலிங்கத்துப்பரணி இயற்றியவர் சயங்கொண்டார்
- இவர் திருவாரூர் மாவட்டத்திலுள்ள தீபங்குடி என்னும் ஊரினர்.
- இவர் முதலாம் குலோத்துங்கச் சோழனின் அரசவை புலவராகத் திகழ்ந்தவர்.
- பரணிக்கோர் சயங்கொண்டார் எனப் பலபட்டைச் சொக்கநாதப் புலவர் பாராட்டியுள்ளார்.
- இசையாயிரம் உலாமடல் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.
- இவரது காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு

- **நூல் குறிப்பு**

- ஆயிரக்கணக்கான யானைகளைப் போரில் கொன்ற வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியத்திற்கு பரணி என்பது பெயர்.
- இது தொன்னூற்றாறு வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- புரணி இலக்கியங்களுள் தமிழில் தோன்றிய முதல் நூல் கலிங்கத்துப்பரணி.
- குலிங்க மன்னன் ஆனந்தபத்மன் மீது முதல் குலோத்துங்கச் சோழன் போர் தொடுத்து வெற்றிப் பெற்றான்.
- அவ்வெற்றியைப் பாராட்டி எழுந்த இந்நூல் தோல்வியுற்ற கலிங்கநாட்டின் பெயரால் அமைந்து உள்ளது.
- இந்நூலில் ஐந்நூற்றுத் தொண்ணூற்றொன்பது தாழிசைகள் உள்ளன.

சயங்கொண்டாரின் சமகாலப் புலவரான ஒட்டக்கூத்தர் இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி எனப் புகழ்ந்துள்ளார்.

**கலிங்கத்துப்பரணி**

1. தீயின் வாயினீர் பெறினு முண்பதோர்
   சிந்தை கூரவாய் வெந்து லர்ந்துசெந்
   நாயின் வாயினீர் தன்னை நீரெனா
   நவ்வி நாவினால் நக்கி விக்குமே.

2. காடிதனைக் கடத்தும்எனக் கருமுகிலும்
   வெண்மதியும் கடக்க அப்பால்
   ஓடிஇளைத்து உடல்வியர்த்த வியர்வன்றோ
   உகுபுனலும் பனியும் அம்மா!

   - சயங்கொண்டார்

✹ **பரணி இலக்கியங்கள்:**

1. தக்கயாகப் பரணி
2. இரணியன் வதைப் பரணி
3. புாசவதைப் பரணி
4. மோகவதைப் பரணி
5. வங்கத்துப் பரணி
6. திராவிடத்துப் பரணி
7. சீனத்துப் பரணி
8. திருச்செந்தூா் பரணி (சூரன் வதைப் பரணி)

**காவடிச் சிந்து**

- ✓ சிந்து என்பது பல்லவி அனுபல்லவி சரணம் என்ற மூன்று உறுப்புகளைக் கொண்ட இசைப்பாட்டு
- ✓ சரணத்தில் பல கண்ணிகள் இடம் பெறும்.
- ✓ கண்ணிகள் மட்டுமே "சிந்து" எனக் கூறப்படும்.
- ✓ காவடிச்சிந்து நூல் கண்ணிகளால் அமைந்த "சிந்து" என்ற சிற்றிலக்கிய வகையைச் சாா்ந்தது ஆகும்.
- ✓ பெரும்பாலும் காவடி எடுத்துக் கொண்டுபோகும் போது பாடல் பாடுவதால் காவடிச் சிந்து எனப் பெயா்பெற்றது.
- ✓ காவடிச் சிந்து என்ற இலக்கிய வகையை முதன்முதலில் பாடியவா் சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாா்.
- ✓ பெற்றோா் சென்னவா் - ஓவுஅம்மாள்
- ✓ காலம் 1861 – 1890
- ✓ திருநெல்வேலிக்கு அருகே உள்ள கழுகுமலையில் எழுந்தருளியிருக்கம் முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல்
- ✓ ஊற்றுமலை ஜமீன்தாா் இருதாலயா மருதப்பதேவா் கழுகுமலை முருகனுக்குக் காவடியெடுத்தபோது வழியில் பாடும் பொருட்டு இயற்றப்பட்ட நூல்.
- ✓ இந்நூலில் 24 பாடல்கள் உள்ளன.
- ✓ காரதி பாரதியாா் கண்ணதாசன் போன்றோா் காவடிச் சிந்து மெட்டில் பாடல்கள் புனைந்துள்ளனா்.
- ✓ இராமயணத் திருப்புகழ்க் காவடிச்சிந்து, அரிச்சந்திரன் திருப்புகழ் காவடிச் சிந்து தேவடிச் சிந்து பூவடிச் சிந்து போன்ற பிற நூல்களும் உள்ளன.
- ✓ பூவடிச் சிந்து என்பது அசன் அலிப்புலவா் இயற்றிய இஸ்லாமிய நூல்.
- ✓ அண்ணாமலை ரெட்டியாா் வீரை அந்தாதி கோமதி அந்தாதி வீரைப்பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளாா்.

❖ **காவடிச் சிந்து**

1. புள்ளிக் கலாபமயிற் பாகன் - சக்தி
புதல்வ னானகன யோகன் - மலை
போலத் தான்திரண்ட
கோலப் பன்னிரண்டு வாகன்
நல்வி வேகன்
வள்ளிக் கிசைந்தமுரு கேசன் - அண்ணா
மலைக்கவி ராசன்மகிழ்
நேசன் - என்றும்
வாழும் கழுகுமலை
வாவி வளம்சொல்லுவேன் மாதே
கேள்இப் போதே
- அண்ணாமலையாா்.

**மேற்கோள்**

புள்ளிக் கலாபமயிற் பாகன் - சக்தி
புதல்வனான கன யோகன் - மலை
போலத்தான் திரண்ட
கோலப் பன்னிரண்டு வாகன் நல் விவேகன்
வள்ளிக்கிசைந்த முருகேசன் - அண்ணா
மலைக்கவிராசன் மகிழ் நேசன் - என்றும்
வாழும் கழுகுமலை
வாவி வளம் சொல்லுவேன் மாதே கேள் இப்போதே!

**நந்திக்கலம்பகம்**

- ✓ மூன்றாம் நந்திவா்மன் என்ற பல்லவ மன்னன் மீது பாடப்பட்ட கலம்பக நூல்
- ✓ ஆசிரியா் பெயரை இதுவரை அறியமுடியவில்லை

- ✓ நந்திவர்மனின் மாற்றாந்தாய்க்குப் பிறந்த நால்வரில் ஒருவர் என்று சிலர் கூறுகின்றனர்.
- ✓ காலம் 9 ஆம் நூற்றாண்டு
- ✓ கலம்பகம் என்ற சிற்றிலக்கிய வகையின் முதல் நூல். (கலம்பகம் குறித்த செய்திகளை இந்நூலில் பக்கம்-ல் காண்க.)
- ✓ வரலாற்றுக் குறிப்புகள் மிகுந்த கலம்பக நூல்
- ✓ கச்சி நாடு, வடவேங்கநாடு, தென்னாடு, சோனைநாடு, அங்கநாடு, பற்றிய குறிப்புகள் உள்ளன.
- ✓ கடம்பூர், குருக்கோட்டை, தெள்ளாறு, பழையாறு, தொண்டி வெள்ளாறு, வெறியலூர் ஆகிய ஊர்களில் நடந்த போர்கள் பற்றிக் கூறுகிறது.
- ✓ நந்திவர்மனின் தெள்ளாற்றுப்போர் பற்றி 16 பாடல்கள் சிறப்பிக்கின்றன.
- ✓ இக்கலம்பகம் பிற கலம்பக அமைப்புகளில் இருந்து சில அமைப்புகளில் மாறுபடுகிறது.

1. கலம்பகங்கள் மதுரைக்கலம்பகம், திருவாமத்தூர்க் கலம்பகம் என ஊர்ப்பெயரால் பெயர் பெறும். இது பாட்டுடைத் தலைவனின் பெயரால் நந்திக்கலம்பகம் எனப் பெயர் பெற்றுள்ளது.
2. கலம்பகம் தெய்வத்தைப் பாடினால் 100 பாடலும், அரசரைப் பாடினால் 90 காடலும் இருக்கும். இது அரசனைப் பாடியிருந்தும் இதில் 100 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.
3. கலம்பகத்தில் 18 உறுப்புகள் இருக்கும். இதில் சில உறுப்புக்கள் குறைந்துள்ளன.

- ✓ கலம்பக இலக்கியங்களுள் நந்திக் கலம்பகமே சிறப்புடையதாகும்.
- ✓ அறம் வைத்துப் பாடப்பட்ட நூலாகக் கருதப்படும் நூல் நந்திக்கலம்பகம்
- ✓ பச்சை ஓலைப் பந்தலின் கீழ் இருந்து நந்திவர்மன் தமிழ்ச்சுவை மிக்க இப்பாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்தபோது அறம் வைத்துப் பாடப்பட்ட “வானுறு மதியை அடைந்தது உன் வதனம்” என்ற நூறாவது பாடலைப் பாடியபோது பச்சை ஓலை தீப்பிடித்து எரிந்து மன்னன் மாண்டுபோனான் என்ற ஒரு கதை உள்ளது.
- ✓ “நந்தி” கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்” – சோமேசர் முதுமொழி வெண்பா.
- ✓ “கலம்பகமே கொண்டு காயம் விட்ட தெள்ளாறை நந்தி” – தொண்டைம ண்டலசதகம்

**மேற்கோள்**

மங்கையர்கண் புனல்பொழிய மழைபொழியும் காலம்
மாறவேல் சிலை குனிக்க மயில்குனிக்கும் காலம்
கொங்கைகளும் கொன்றைகளும் பொன்சொரியும் காலம்
கோகநக நகைமுல்லை முகைநகைக்கும் காலம்
அங்கு உயிரும் இங்கு உடலும் ஆன மழைக்காலம்
அவர் ஒருவர் நாம் ஒருவர் ஆனக் கொடுங்காலம்
“கவலை பெரிது பழிகாரர் வந்திலார்
கணவர் உறவு கதையாய் முடிந்ததே”

“ஈட்டு புகழ் நந்தி பாண! எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவுஅளவும் கேட்டிருந்தோம்
பேய்என்றாள் அன்னை பிறர்நரி என்றார் தோழி
நாய் என்றாள், நீ என்றேன் நான்”.

### ❖ திருவேங்கடத்தந்தாதி

- ✓ ஆசிரியர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
- ✓ 12, 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்
- ✓ ஊர் திருமங்கை
- ✓ இராமாநுசரின் சீடரான திருவரங்கத்து அமுதானரின் பேரன்
- ✓ கூரத்தாழ்வாரின் மகனான பராச்சரப்பட்டரின் சீடர் என்பர்.
- ✓ ஆராய்ச்சியாளர்கள் 17 ஆம் நூற்றாண்டு என்பர்.
- ✓ “திவ்வியகவி”, “அழகிய மணவாளதாசன்” என்ற சிறப்புப் பெயர்கள் உண்டு.
- ✓ திருமலைநாயக்கரின் அரண்மனையில் எழுத்தராகப் (ராயசம்) பணிபுரிந்தவர்.

- ✓ இவர் பாடிய அட்டப்பிரபந்தத்துள் ஒன்று திருவேங்கடத்தந்தாரி.
- ✓ 96 சிற்றிலக்கியங்களுள் ஒன்று அந்தாதி.
- ✓ அட்டபிரபந்தங்கள்: 1. திருவரங்கத்தந்தாதி, 2. திருவேங்கடத்தந்தாதி, 3. திருவேங்கட மலை, 4. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, 5. அழகர் அந்தாதி, 6. திருவரங்கத்து மாலை, 7. திருவரங்கக் கலம்பகம், 8. ஸ்ரீரங்க நாயகர் ஊசல் ஆகியன.
- ✓ திருநறையூர் நம்பிமேகவிடு தூது, எதிராசர் அந்தாதி, பரப்பிரம்ம விவேகம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.
- ✓ வைணவ நூல்களில் முதலில் நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் அடுத்து வேதாந்த தேசிகரின் “தேசிகப் பிரபந்தமும்” பிறகு பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் “அட்டப் பிரபந்தமும்” புகழ்பெற்ற நூல்களாகும்.
- ✓ திருவேங்கடத்தந்தாயில் மொத்தம் 100 பாடல்கள் உள்ளன.
- ✓ வேங்கடத்தின் பெருமை கூறும் நூல்.
- ✓ நாயகி பாவம் நிறைந்த அந்தாதி.

**மேற்கோள்**

பொருதரங்கத்தும் வடத்தும் அனந்தபுரத்தும் அன்பர் கருவரங்கத்தும் துயில்வேங்கடவா! கண்பாத்து

அருள்வாய்

நிருதர்அங்கத்து நிறம்போல் வரும் அந்திநேரத்து

அன்றில்

ஒருதரம் கத்தும் பொழுதும் பொறாள் என்ஒருவல்லியே”

“ஒருமாதுஅவனி ஒருமாதுசெல்வி உடன் உறைய வரும் ஆதவனின் மகுடம்வில்வீச வடமலைமேல் கருமாதவன் கண்ணன் நின்பால் திருநெடுங்கண்

வளர்தற்கு

அருமாதவம் என்னசெய்தாய்ப் பணிஎனக்கு அன்புதியே”.

**❖ பெத்தலகேம் குறவஞ்சி**

- ➤ ஆசிரியர் வேதநாயக சாஸ்திரியார்
- ➤ 07.09.1774ல் திருநெல்வேலியைச் சேர்ந்த அருணாசலம் பிள்ளை என்ற தேவசகாயத்திற்கும், ஞானப்பூ அம்மையார்க்கும் மகனாகப் பிறந்தார்.
- ➤ சுவார்ட்ஸ் பாதிரியாரின் வளர்ப்பு மகனாக வளர்ந்தார்.
- ➤ தரங்கம்பாடிக் கல்லூரியில் படித்தவர்.
- ➤ சுவார்ட்ஸ் தொடங்கிய பள்ளியில் தலைமையாசிரியராகப் பணிபுரிந்தார். அதனால் “அண்ணாவியார்” எனப்பட்டார்.
- ➤ ஞானப்பாடல்கள் பாடியதால் மன்னர்க்கு நெருக்கமானவர்.
- ➤ 24.01.1864 இல் இயற்கை எய்தினார்.

**➤ இயற்றிய நூல்கள்**

பெத்தலகேம் குறவஞ்சி, சென்னைப் பட்டினப் பிரவேசம், ஆதி ஆனந்தம் சாஸ்திரகும்மி, ஞான அந்தாதி, ஞான உலா ஞான ஏற்றப்பாட்டு, ஞான பதக்கீர்த்தனைகள், தோத்திரப்பாடல்கள், பராபரமாலை, பல சரித்திரம், பேரின்பக் காதல், வண்ண சமுத்திரம், ஞான தச்சன்நாடகம், ஞான நொண்டி நாடகம், சுவிசே‘ நாடகம்.

- ➤ சுவிசே‘க் கவிராயர் என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்.
- ➤ தமிழ்க் கிறித்தவர்களுக்கு வழிபாட்டில் பயன்படுமாறு முதன்முதலாகப் பாக்களை இயற்றித் தந்தவர்.
- ➤ பெத்தலகேம் குறவஞ்சியைப் பாடியதால் “ஞான தீபக் கவிராயர்” என்ற பட்டமும் 60 வராகன் பொன்னும் ஒரு பல்லக்கும் பரிசாகப் பெற்றார்.

- பெத்தலகேம் குறவஞ்சி என்ற நூல் ஏசுநாதரைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு அவர் பெருமை பேசும் நூல்.
- சென்னை வேப்பேரிப்பாக்கத்துச் சபையினரால் அரங்கேற்றம் செய்யப்பட்டது,
- இது ஓர் இசை நாடக நூல்
- எண்சீர் விருத்தம், கலிவிருத்தம், கண்ணிகள் ஆகியனவும் கலந்துள்ளன.
- ஏசுவின் வரலாற்றைக் கூறும் நூல்
- காதல் சுவை இல்லாத ஒரே குறவஞ்சி
- ஞானக் குறவஞ்சி என்ற பெயரும் உண்டு.

**சிலேடைப் பாடல்:**

- மரமும் பழைய குடையும் - ஆசிரியர் - அழகிய சொக்கநாதப் புலவர்.
- ஒரு சொல்லோ தொடரோ இருப்பொருள் தருமாறு பாடுவது சிலேடை எனப்படும்.
- இதனை 'இரட்டுற மொழிதல்' என்று கூறுவர்.
- இரண்டு + உற + மொழிதல் - இரட்டுற மொழிதல் இரண்டு பொருள்படப்பாடுவது.

- **ஆசிரியர் குறிப்பு:**
- ஆழகிய சொக்கநாதப் புலவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தச்சநல்லூரில் பிறந்தவர்.
- இருபத்தைந்திற்கும் மேற்பட்ட தனிப்பாடல்களை இயற்றியவர்.
- இவர் காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு

- **மரமும் பழைய குடையும்** (6ம் வகுப்பு)

பிஞ்சு கிடக்கும் பெருமழைக்குத் தாங்காது
மிஞ்சு அதனுள் வெயில்ஒழுகும் - தஞ்சம்என்றோர்
வேட்டதுஅருள் முத்தசுவா மித்துரைரா
சேந்திராகேள்!
கோட்டுமரம் பீற்றல் குடை.
- அழகிய சொக்கநாதப் புலவர்.

**8. இரட்டுறமொழிதல்**

ஓடும் சுழிசுத்தம் உண்டாகும் துன்னலரைச்
சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும் - நாடறியத்
தேடு புகழான் திருமலைரா யன்வரையில்
ஆடுபரி காவிரியா மே.
- காளமேகப் புலவர்

**நளவெண்பா – புகழேந்திப் புலவர்**
**சுயம்வர காண்டம்:**

- ஆசிரியர் குறிப்பு:
- பெயர் - புகழேந்திப் புலவர்
- பிறந்த ஊர் - தொண்டைநாட்டின் பொன் விளைந்த களத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பெருங்களத்தூர்)
- சிறப்பு – வரகுண பாண்டியனின் அவைப் புலவர்
- ஆதரித்த வள்ளல் - சந்திரன் சுவர்க்கி
- காலம் - கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு கம்பரும், ஒட்டக்கூத்தரும் இவர் காலத்தில் வாழ்ந்தனர்.
- வெண்பா யாப்பில் காப்பியப் பொருளைத் தொடர்நிலைச் செய்யுள்களாய் பாடிய சிறப்பினால் இவர் வெண்பாவிற்கு புகழேந்தி எனப் போற்றப்படுகிறார்.

நூல் குறிப்பு:

- நளவெண்பா என்பது, நளனது வரலாற்றை வெண்பாக்களால் கூறும் நூலென விரிந்து பொருள் தரும்.
- இந்நூல் சுயம் வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என மூன்று காண்டங்களைக் கொண்டது.
- இதில் நானூற்று முப்பத்தொரு வெண்பாக்கள் உள்ளன.

- **நளவெண்பா**

- புகழேந்திப்புலவர்

1. ஆழிவடி அம்புஅலம்ப நின்றானும் அன்றொருகால்

ஏழிசைநூல் சங்கத்து இருந்தானும் - நீள்விசும்பின்
நல்தேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானும் கண்டாய்இச் சேய்.

2. தெரியல் இவன்கண்டாய் செய்கழுநீர் மொட்டை
அரவின் பசுந்தலை என்றஞ்சி - இரவெல்லாம்
பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புள் தாலாட்டும்
வள்ளைக் குருநாடர் மன்.

3. வண்ணக் குவளை மலர்வெளவி வண்டெடுத்த
பண்ணில் செவிவைத்துப் பைங்குவளை - உண்ணாது
அருங்கடாநிற்கும் அவந்திநாடு ஆளும்
இருங்கடா யானை இவன்.

4. கூன்சங்கின் பிள்ளை கொடிப்பவளக் கோடிடறிந்
தேன்கழியில் வீழத் திரைக்கரத்தால்- வான்கடல்வந்(து)
அந்தோ என எடுக்கும் அங்கநாடு ஆளுடையான்
செந்தேன் மொழியாய்இச் சேய்.

5. வெள்வாளைக் காளைமீன் மேதிக் குலமெழுப்பக்
கள்வார்ந்த தாமரையின் காடுழக்கிப்-புள்ளோடு
வண்டுஇரியச் செல்லும் மணிநீர்க் கலிங்கர்கோன்
தண்தெரியல் தேர்வேந்தன் தான்.

6. காவலரைத் தன்சேடி காட்டக்கண்டு ஈரிருவர்
தேவர்நளன் உருவாச் சென்றிருந்தார்- பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்
றூசலா டுற்றாள் உளம்.

7. மின்னும்தார் வீமன்தன் மெய்ம்மரபில் செம்மைசேர்
கன்னியான் ஆகில் கடிமாலை – அன்னம்தான்
சொன்ன வனைச்சூட்ட அருளென்றாள் கூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து.

8. கண்இமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால் - எண்ணி
நறுந்தாமரை விரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு.

9. விண்அரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்அகல் ஞாலம் களிகூர் - மண்அரசர்.
வன்மாலை தன்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

10. திண்தோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்தா மரையாய் வெளுத்தவே – ஒண்தாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது.

11. மல்லல் மறுகில் மடநா(கு) உடனாகச்
செல்லும் மழவிடைபோல் செம்மாந்து - மெல்லியலாள்
பொன்மாலை பெற்ற தோளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலான் நளன்.

**காளமேகப்புலவர்**

- ❖ இயற்பெயர் வரதன்
- ❖ ஊர் : கும்பகோணத்தை அடுத்த நந்திபுரம்
- ❖ திருவரங்கம் பெரிய கோயிலில் மடைப்பள்ளியில் சமையல் தொழில் செய்தவர்
- ❖ அந்தணர் குலத்து வைணவர் (ஐயங்கார்)
- ❖ திருவானைக்கா கோயில் தாசியான மோகானங்கிமேல் காதல் கொண்டு சைவராக மாறியவர்.
- ❖ திருமலைராயன் அவைக்கள தலைமைப் புலவர் அதிமதுரகவியோடு வாதிட்டு ‘எமகண்டம்’ பாடி அரரை வென்றவர்.
- ❖ திருவானைக்கா உலா பாடியுள்ளார்
- ❖ இவர் பெயரில் 403 பாடல்கள் உள்ளன.
- ❖ கரியமேகம் எவ்வாறு விடாது பெய்யுமொ, அதுபோல ‘இம்’ என்னும் முன்னே எழுநூறு கவிபாடும் ஆற்றல் மிக்கவர். அதனால் காளமேகம் எனப்பட்டார்.
- ❖ ‘வசைபாட காளமேகம்’ என்பது வழக்கு
- ❖ வைக்கோலுக்கும் யானைக்கும், பாம்புக்கும் வாழைப்பழத்திற்கும், பாம்புக்கும் எள்ளுக்கும் தேங்காய்க்கும் நாய்க்கும், மீனுக்கும் பேனுக்கும்

பனைமரத்திற்கும் வேசிக்கும் என பல்வேறு சிலேடை பாடியுள்ளவர்.

"சுத்துகடல் சூழ்நாகை காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும் - குத்தி
உலையில்இட ஊர் அடங்கும், ஓர் அகப்பை அன்னம்
இலையில்இட வெள்ளி எழும்."

"அப்பன் இரந்துண்ணி, ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறி திருடி – சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத்தானுக்கு இங்கு
எண்ணும் பெருமை இவை."

"துதிவாணி வீரம் விசயம் சந்தானம் துணிவு தனம்
மதிதானியம் சௌபாக்கியம் போகம் அறிவு அழகு
புதிதாம் பெருமை அறம்குலம் நோவுஅகல்

பூண்வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே"

- வர்க்க எழுத்துக்களை மட்டுமே கொண்டு பல பாடல் புனைந்தவர்.
- திருவானைக்காவில் இயற்கை எய்தினார்.

**மனோன்மணியம்**

- நூல் ஆசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை
- வாழ்க்கை : 1855 முதல் 1897 வரை
- தத்துவப் பேராசிரியர்
- ராவ் பகதூர் பட்டம் பெற்றவர்.
- மனோன்மணியம் என்ற கவிதை நாடகத்தை எழுதியவர்
- ஆங்கிலத்தில் லிட்டன் பிரபு எழுதிய (வுாந ளநஉசநவ றயல) இரகசிய வழி என்ற நூலைத் தழுவி எழுதப்பட்டது மனோன்மணியம்.
- மனோன்மணியம் ஆசிரியப்பாவால் ஆனது.
- தமிழில் இலக்கியத் தரம் வாய்ந்த நாடகம் இல்லாத குறையைப் போக்கியது மனோன்மணியம்
- 'நீராரும் கடலுடுத்த' எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்து இடம் பெற்ற நூல் மனோன்மணியம்
- தமிழ்த்தாய் வாழ்த்து ப.்.றாழிசைக் கொச்சகக் கலிப்பா என்ற பாவில் இயற்றப்பட்டுள்ளது.
- தமிழைத் தெய்வமாகப் போற்றிய நூல்
- தமிழ்த்தாய் வாழ்த்திற்கு இசை அமைத்தவர் மெல்லிசை மன்னன் எம்.எஸ்.விசுவநாதன்
- தமிழ்த்தாய்க்குக் கோயில் உள்ள ஊர் காரைக்குடி
- ஜீவகன், மனோன்மணி, குடிலன், புருசோத்தமன், வாணி, நடராசன், சுந்தர முனிவர், கருணாகரர், நி'டாபரர் போன்ற பாத்திரங்கள் இடம்பெறும் நூல்.
- பாண்டிய மன்னன் ஜீவகன்
- ஜீவகனின் குரு சுந்தர முனிவர்
- ஜீவகனின் அமைச்சன் குடிலன்
- மனோன்மணியை மணந்தவன் சேரமன்னன் புருே'ாத்தமன்
- மனோன்மணியின் தோழி வாணி
- வாணியின் காதலன் நடராசன்
- சுந்தரமுனிவரின் சீடர்கள் கருணாகரர், நி'டாபரர்
- சிவகாமி சரிதம் என்ற கிளைக்கதை இடம் பெற்ற நூல் மனோன்மணியம்
- நாடகத்துள் நாடகமாகத் திகழ்வது சிவகாமி சரிதம்
- தத்துவப் பொருள் கொண்டது சிவகாமி சரிதம்
- 'சிவகாமி சபதம்' என்பது கல்கி எழுதிய வரலாற்று நாவல்

**பிற நூல்கள்**

- திருஞான சம்பந்தர் கால நிர்ணயம்
- நூற்றொகை விளக்கம்
- சேரநாட்டுப் பழங்கால அரசர்கள்
- ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டவை:

திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி

## ➢ பாஞ்சாலி சபதம்

❖ "முப்பெரும் பாடல்கள்" எனப்படும் மூன்றில் ஒன்று.
❖ பாஞ்சாலி சபதம் இரண்டு பாகங்களைக் கொண்டது. ஐந்து சருக்கங்கள் 412 பாடல்கள் உள்ளன.
❖ முதல் பாகத்தில் 1. சூழ்ச்சிச் சருக்கம் 2. சூதாட்டச் சருக்கம் என்ற இரு சருக்கங்கள் உள்ளன.
❖ இரண்டாம் பாகத்தில் 1. அடிமைச் சருக்கம் 2. துகில் உரிதல் சருக்கம், 3. சபதச் சருக்கம் என்ற மூன்று சருக்கங்கள் உள்ளன.
❖ பாஞ்சாலி சபதம் நூலை 1919-லேயே பாரதி எழுதி முடித்துவிட்டார் என்பது 05.09.1919-ல் பாரதியார் வயி.ச.சண்முகம் செட்டியாருக்கு எழுதிய கடிதத்திலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.
❖ பாஞ்சாலி சபதத்தின் முதல்பாகம் 1912 இல் பாரதி வாழ்ந்த காலத்திலேயே வெளிந்தது.
❖ 1924 இல் முழு நூலையும் பாரதி பிரசுராலயம் வெளியிட்டது.

**பாஞ்சாலி சபதம்**

**விதுரனைத் தூதுவிடல்**

1. தம்பிவிதுரனை மன்ன னழைத்தான்
தக்க பரிசுகள் கொண்டினி தேகி,
எம்பியின் மக்க ளிருந்தர சாளும்
இந்திர மாநகர் சார்ந்தவர் தம்பால்
கொம்பினை யொத்த மடப்பிடி யோடும்
கூடியிங் கெய்தி விருந்து களிக்க
நம்பி யழைத்தனன் கௌரவர் கோமான்
நல்லதோர் நுந்தை யெனவுரை செய்வாய்.

2. அண்ணனிடம் விடைபெற்று விதுரன் சென்றான்
அடவிமலை யாறெல்லாம் கடந்து போகித்
திண்ணமுறு தடந்தோளும் உளமுங் கொண்டு
திருமலியப் பாண்டவர்தா மரசு செய்யும்
வண்ணமுயர் மணிநகரின் மருங்கு செல்வான்
வழியிடையே நாட்டினுறு வளங்க ணோக்கி
எண்ணமுற லாகித்த னிதயத் துள்ளே
யினையபல மொழிகூறி யிரங்கு வானால்.

3. நீலமுடி தரித்தபல மலைசேர் நாடு,
நீரமுத மெனப்பாய்ந்து நிரம்பு நாடு,
கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழுங்
குளிர்காவுஞ் சோலைகளுங் குலவு நாடு,
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்கப்
பாலடையு நறுசெய்யுந் தேனு முண்டு
பண்ணவர்போல் மக்களெலாம் பயிலு நாடு.

4. பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கு நாடு
பெண்களெல்லாம் அரம்பையர்போ லொளிரு நாடு
வீரமொடு மெய்ஞ்ஞானந் தவங்கள் கல்வி
வேள்வியெனு மிவையெல்லாம் விளங்கு நாடு
சோரமுதற் புன்மையெதுந் தோன்றா நாடு
தொல்லுகின் முடிமணிபோல் தோன்று நாடு
பாரதர்தந் நாட்டிலே நாச மெய்தப்
பாவியேன் துணைபுரியும் பான்மை யென்னே!

5. விதுரன் வருஞ்செய்தி தாஞ்செவி யுற்றே
வீறுடை யைவ ருளமகிழ் பூத்துச்
சதுரங்கச் சேனை யுடன்பல பரிசும்
தாளமு மேளமுந் தாங்கொண்டு சென்றே
எதிர்கொண் டழைத்து மணிமுடி தாழ்த்தி,
ஏந்தல் விதுரன் பதமலர் போற்றி
மதுர மொழியிற் குசலங்கள் பேசி
மன்ன னொடுந்திரு மாளிகை சேர்ந்தார்.

- பாரதியார்

**மேற்கோள்**

"பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கும் நாடு
பெண்கள் எல்லாம் அரம்பையர்போல் ஒளிரும் நாடு
வீரமொடு மெய்ஞ்ஞானம் தவங்கள் கல்வி
வேள்விஎனும் இவையெல்லாம் விளங்கும் நாடு
சோரமுதல் புன்மை ஏதும் தோன்றா நாடு
தோல்உலகின் முடிமணிபோல் தோன்றும் நாடு
பாரதர்தம் நாடு". - விதுரன் கூற்று

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்

தருமம் மறுபடியும் வெல்லும் எனும் இயற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்"
– அர்ச்சுனன் கூற்று

- ❖ பாரதியார் ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலிய உரைநடை இலக்கியங்களையும் எழுதினார்.
- ❖ நீடுதுயில் நீக்கப்பாடிவந்த நிலா, தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி, தேசியகவி, மாகவி என்று போற்றப்படுகின்றார்.

"பாட்டுக்கு ஒருபுலவன் பாரதியடா-அவன்
பாட்டை பண்ணோடு ஒருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா – அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பையடா
- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

- ❖ பாரதியார் பாஞ்சாலி சபதத்தை, "தமிழ் மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு இனிப்பிறந்து காவியங்கள் செய்யப்போகின்ற வரகவிகளுக்கும், அவர்களுக்குத் தக்கவாறு கைங்கரியங்கள் செய்யப்போகின்ற பிரபுக்களும் இந்நூலைப் பாத காணிக்கையாகச் செலுத்துகின்றேன்" என்று சமர்ப்பணம் செய்துள்ளார்.

- ❖ "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினை உடைய காவியம் ஒன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்கு உயிர் தருவோன் ஆகின்றான்" – பாரதி எழுதிய முகவுரைப்பகுதி.

- ❖ **குயில்பாட்டு**
- ❖ ஆசிரியர் பாரதியார்
- ❖ பாரதியின் முப்பெரும் பாடல்களுள் ஒன்று
- ❖ இது ஒரு குறுங்காவியம்
- ❖ 1914-1915 காலத்தில் எழுதப்பட்டது
- ❖ பாரதியார் காசியில் வாங்கிய நோட்டுப் புத்தகத்தில் இக்காவியத்தை எழுதியுள்ளார். அதில் முன்பக்கத்தில் 1914-1915 என்று குறித்துள்ளார்.
- ❖ இது ஒரு காதல் கதை:
  குயில் ஒன்று புலவரைக் காதலிக்கிறது. அவரும் அதில் மயங்குகிறார் - இருவரும் சோலையில் சந்திக்கிறார்கள் - குயில் நான்காம் நாள் வரச் சொல்கிறது – மறுநாள் புலவர் சோலைக்கு வர குயில் குரங்கிடம் தன் காதலைக் கூறுகிறது - மூன்றாம் நாள் வந்து பார்க்க குயில் மாட்டிடம் தன் காதலைக் கூறுகிறது – நான்காம் நாள் குயில் தன் முற்பிறப்புச் செய்திகளைக் கூறுகிறது. புலவர் காதலோடு குயிலைத் தொட அது அழகிய பெண்ணாக மாறுகிறது – காட்சி மறைகிறது.
- ❖ இது ஒரு கனவுக்கதை

**மேற்கோள்:**

"பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவின் நிகழ்ச்சி"
"காதல் காதல் காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல் சாதல்"
"சோலைக் குயில் - காதல் - சொன்ன கதை
அத்தனையும் மாலை
அழகின் மயக்கத்தால் உள்ளத்தே தோன்றிய ஓர்
கற்பனையின் சூழ்ச்சி என்றே கண்டு
கொண்டேன் ஆன்ற
தமிழ்ப் புலவீர் கற்பனையே ஆனாலும் வேதாந்தமாக
விரித்துப் பொருள் உரைக்க யாதானும் சற்றே
அடமிருந்தால் கூறீரோ?" என முடிக்கின்றார்.

- ❖ இக்கற்பனைக் கதையின் ஊடே பாரதி ஓர் உண்மையைப் பொதித்து வைத்துள்ளார்.
- ❖ குயிலி, குரங்கன், மாடன், சேர இளவரசன் போன்றோர் எல்லாம் உருவகம் போலும்
- ❖ இது ஓர் தொடர் உருவகம் அமைந்த கதை போலும்
- ❖ இந்நூல் முதன்முதலாக 1923 இல் பாரதி பிரசுராலயத்தில் வெளியிடப்பட்டது.
- ❖ இதில் பாரதி கூறும் கருத்து யாது? என்பது குறித்துப் பலரும் பலவிதமாக ஆய்ந்துள்ளனர்.

- **அழகிய சொக்கநாதப்புலவர்**
- காலம் 19 ஆம் நூற்றாண்டு
- திருநெல்வேலியை அடுத்த தச்சனூரில் வன்னியர்க்கு மகனாகப் பிறந்தார்.
- முன்சீப் நீதிமன்றத்தில் பிரதி எழுதும் பணி. முாதம் பத்து ரூபாய் சம்பளம்.
- “எனக்கு மாசம்பத்து வருகிறது” என இரட்டுற மொழிவார் (மாசம் - பத்து, மாசம்பத்து)
- சங்கரநயினார் கோவிலுக்கு “இராசைமாநகர்” என்ற பெயர் உண்டு.
- இராசை கோமதி அம்மைபதிகம், முத்துசாமிப் பிள்ளை காதற்பிரபந்தம், காந்தியம்மை கும்மி, கோதைக் கும்மிப் பாடல்கள் எனப் பலநூல்களை இயற்றியவர்.
- இவர் பாடிய மாமரத்திற்கும் கிழிந்த குடைக்கும் உள்ள சிலேடை வருமாறு

பிஞ்சு கிடக்கும் பெருமழைக்குத் தாங்காது
மிஞ்ச அதனுள் வெயில் ஒழுகும் - தஞ்சம் என்றோர்
வேட்டது அருள் முத்துசுவாமித்துரை ராஜேந்திரா கேள்
கோட்டுமரம் பீற்றல் குடை

எங்களது Facebook பக்கம்

English – Examsdaily தமிழ் – Examsdaily Tamil

எங்களது WhatsAPP Group - Click Here